வரவு செலவுத்திட்டம் 2024: முக்கியமான நடவடிக்கைகள்

2024 வரவு செலவுத்திட்டத்தில் உள்ள பிரதானமான நடவடிக்கைகள்: ஒவ்வொரு சந்ததிக்குமான நியாயத்தன்மை.

கட்டுபடியான கூடுதல் மனைகள்; (வீடுகள்)

*ஒரு புதிய வீட்டுத்திட்டத்திற்கான பொதுவாக உள்ள காணி (நிலம்) பற்றி எல்லாவழிகளிலும் கிடைக்கக்கூடிய கருவிகளைப் பயன்படுத்தி 2031 அளவில் 250,000 வீடுகளை பொது நிலங்களில் அமைத்தல்.இவற்றில் கனடா தபால் ஆதனங்கள்,தேசிய பாதுகாப்பு சொத்துக்கள், அலுவலக கட்டடங்கள் உள்ளடங்குவதாக அமையும்.

*** 2031-2032 இடையேயான காலப்பகுதிக்குள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மொத்தமாக 131,000 புதிய வீடுகளை அமைக்கும் பணியில் கூடுதலான வாடகைக் குடியிருப்புக்கள் (அடுக்குமனைகள்) விரைவாக உருவாக்குவதில் $15 பில்லியன் புதிய கடன்களாக அடுக்கு மனை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு கடனாக நிதி ஆதரவளி**

**த்தல்.**

*** நாட்டில் போதுமான அளவில் பயன்படுத்தாத நிலங்களை நடுத்தரவர்க்கத்தினருக்கு கட்டுபடியாகக்கூடியவிதத்தில் வீடுகளை அமைக்க ஒரு குழுவாகச்சேர்ந்து கனடா கட்டுமானத்தை முன்னெடுக்கும், வாடகை வீடுகளைஅமைக்கும் பணியில் சமஸ்டி அரசானது மாகாணங்களுடனும்,பிராந்தியங்களுடனும் இணைந்து ஈடுபடும்.**

***$4 பில்லியன் விரைவுபடுத்தும் வீட்டு நிதியத்திற்கு மேலதிகமாக $400 மில்லியன் தொகை வழங்கப்பட்டு ஏற்கனவே விரைவான 750.000 க்கும் அதிகமான புதிய வீட்டு கட்டுமானங்களிற்கான ஒப்பந்தத்தினை மாநகரங்களுடனும், மாகாணங்களுடனும், பிராந்தியங்களுடனும் இணைந்து அடுத்த பத்து ஆண்டுகளிற்குள் முடிக்கும் 179 ஒப்பந்தத்தினை மேற்கொண்டமைக்காக அவர்களுக்கு நன்றிகள்.**

***1.5 பில்லியன் கனடா வாடகைக் குடியிருப்பாளர்களை பாதுகாப்பதற்கான் நிதியம் ஒன்றினை வெளியிட்டுள்ளதன் மூலம் கனடாவில் கட்டுபடியான வீடுகளின் தொகையினை அதிகரிப்பதற்கும் குடியிருப்பாளர்களையும் பாதுகாக்கும் பொருட்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**⁎ ஏற்கனவே வெற்றிகரமாக மூன்று சுற்றுக்களாக உள்ள கட்டுமான விரைவான வீட்டுத்திட்ட முயற்சிகளுக்கு மேலும் $1 பில்லியன் நிதியானது கட்டுபடியாகக்கூடிய வீடமைக்கும் மற்றும் நிரந்தரமான விரைவான வீடமைப்பு பிரிவும் அதனுடன் சேர்க்கப்படும்.**

**⁎$1.3 பில்லியன் நிதி வீடொன்றினை அடைவதற்காக முதலிடப்படும்.: இது கனடாவில் வீடற்றவர்களுக்கான உத்தியாகக் கருதி வீடற்றவர்களுக்கும், முகாம் அமைப்பவர்களுக்குமாக அமையும்.**

**⁎ஒரு புதிய கண்டாவின் வீடமைப்பு நிர்மாணத்திற்காக அதன் உட்கட்டமைப்பு நிதியம் ஒன்றினை 10 வருடங்களிற்கு மேற்பட்டகாலத்திற்கு $6 பில்லியன் நிதி உதவியினை வழங்குவதன் மூலம் வீடமைப்பினையும்,வீட்டு உட்கட்டுமானத்தை மேம்படுத்த உதவியாக அமையும்.**

**⁎வெளிநாட்டு சான்றிதள்களை நெறிப்படுத்தி அங்கீகாரம் அளித்து கட்டுமானத்துறையிலும், கூடுதலான பயிற்சிக்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படுவதன் மூலம் அத்திறன்களினூடாக கூடிய வீடுகளை நிர்மாணிக்கலாம்.**

**⁎5 வருட காலத்திற்கு மேலாக $918 மில்லியன் செலவுசெய்வதன் மூலம் பழங்குடி மக்களாக உள்ள முதல் குடி மக்கள்,இனியுற் (inuit), மெடிஸ், (metis) களிடையே உள்ள வீடற்றவர்களின் பிரச்சினையின் இடைவெளியைக் குறைக்கலாம்.**

கனடாவின் கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கான வீட்டுவசதிகளை கட்டியெழுப்ப ஊக்கமளிக்கப்படும் அத்துடன் புதிய மாணவர் இருப்பிடங்களில் GST என்ற பொருட்கள் வேவைகளுக்கான வரி நீக்கப்படுவதனை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

- வீட்டினை வாங்கும் திட்டத்திற்கு அமைய அதனை மேம்படுத்தும் பொருட்டு மீளப்பெறும் தொகையினை $35,000 லிருந்து $60,000 ஆக அதிகரிப்ப்பதுடன், முதல் தடவையாக வீடு வாங்குபவர்களுக்கு RRSP வரிநலன்களைப் பயன்படுத்தவும் $25,000 அல்லது அதற்கு மேலாக அவர்கள் வீடுவங்குவதற்கு முதலிட அல்லது முன்பணமாக இடுவதற்கும் அதனை விரைவு படுத்த வேண்டும்.

- இளம் கனேடியர்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை வாங்கும் வண்ணம் ஒரு அடமானக்கடனைப் பெறக்கூடியவிதமாக கனேடிய அடமானக்கடன் சாசனம் ஒன்றினை 30 வருடங்களிற்கு பணமதிப்பு நீக்கம் (Amortization) செய்யும் வகையில் மாற்றியமைக்க வேண்டும்.
- ஒரு புதிய கனடா வாடகை மசோதா மூலம் வாடகைக்குடியிருப்பாளரின் உரிமைகளை விருத்தி செய்யும் பொருட்டு மாகாணங்களுக்கும், பிராந்தியங்களிற்குமான புதிய மசோதா வாடகைக்கு வீடு பெறுதல் நியாயமானதென்பதனையும்,திறந்த மனதுடனும்,ஒளிவுமறைவின்றித் தெளிவாகத் தெரிவிக்கவும் வேண்டும்.

**ஒவ்வொரு நாள் செலவையும் குறைத்தல்**

- கனடா பூராகவும் பிள்ளைப்பராமரிப்பு இடங்களைத் தோற்றுவிப்பதற்குரிய கட்டுமானப்பணிகளுக்கு முதலீடு செய்வதும், ஆரம்பக் கற்க்கை நிலையங்கள் பிள்ளைப் பராமரிப்பு போன்றவற்றிற்கு $10 ஒரு நாளைக்கு வழங்குதல்.
- 600.000 பேருக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்யும் வயதில் கனடாவில் குறைபாடுள்ளவர்களாக உள்ளனர். இவர்களுக்கான மாகாண,பிராந்திய ரீதியிலான,நலத்திட்டமும் அவர்களுக்கு
- நிதி நலன்களை அதிகரிக்கவும், கனடா குறைபாடுள்ள வர்களுக்கான நலத்திட்டமும் அறிவிக்கப்படவேண்டும்.
- ஒவ்வொரு வருடமும் 400,000 ற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதன் பொருட்டு ஒரு புதிய தேசிய பாடசாலை உணவுத்திட்டம் உருவாக்கப்படவேண்டும்.இதனூடாக மாகாண,பிராந்திய பாடசாலைகளுக்கும் தற்பொழுதுள்ளவற்றை விரிவுபடுத்தவேண்டும்.
- மருந்துகொள்வனவில் அதன் கவனிப்பிற்காக முதல் படியாக ஒரு தேசிய மருந்துக்காப்புத் திட்டம் (pharmacare) உருவாக்கப்படவேண்டும். (அந்நிகழ்ச்சித்திட்டத்தில் மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் கருத்தடைகளுக்கும்,நீரிழிவு நோய் போன்றவற்றிற்குமான மருந்துகளை வாங்க மருந்துப்பெறுமதி ஒரு தடையாக அமையமுடியாது.
- கனேடியர்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க உணவின் அளவு, தரம் மாறாமலும்,மளிகை பொருட்களுக்கிடையிலான போட்டிகளை அந்தந்த துறையில் ஈடுபடுவர்களுக்கு சில நடவடிக்கைகளை

மேற்கொள்வதன் மூலமும் அந்த விலைகளை ஒரு ஸ்திர நிலையிலும் ( மாற்றமடையாமலும் ) வைத்திருக்க ஆவனசெய்தல்.

- மேலதிக கட்டணங்களை விமானசேவைநிறுவனங்கள் அறவிடாவண்ணம் அவர்களைக்கட்டுப்படுத்தவேண்டும். இதன் மூலம் மத்திய தர வகுப்பினருக்கு அவர்களின் கைகளில் கூடுதலான பணப்புளக்கத்திற்கு வழி சமைக்கும்.
- தொலைத்தொடர்புச் சட்டத்தினைத் திருத்துவதன் மூலம் பாவனையாளர்களான கனேடியர்கள் தொலைபேசி சேவையை மாற்ற, புதுப்பிக்க,இரத்துச்செய்ய ஆவனசெய்தல்,இதற்கு இணயத்தளம், வீட்டின் தொலைபேசி, கைத்தொலைபேசி, யாவும் உள்ளடக்கப்படும். தேவையற்ர கட்டணங்கள் தவிர்க்கப்படவேண்டும்.
- வங்கி கணக்குகளை மேம்படுத்தல்,இலவசமாக, கட்டுபடியானதாக வங்கிக்கணக்கினை ஆக்குதல், நிதி போதாமைக்காக அர்றவிடப்படும் பணத்தை வங்கிகள் $10 இனை மட்டும் வாடிக்கையாளரிடமிருந்து பெறுதல்.
- தமது உடைந்த அல்லது பழுதான உபகரணங்களை நியாயமான விலையில் பழுது பார்த்தல். இதற்காக இதனை கட்டியெழுப்பும் வழியை முன்னேற்றுதல் அல்லது வலுப்படுத்தல்.
- $62.9 மில்லியன் தொகையை 3 வருட காலங்களிற்கு உள்ளூர் உணவு உட்கட்டமைப்பினை விரிவாக்கம் செய்ய கனடா முழுவதுமாக அதற்குரிய் முதலீட்டினை சமூக அமைப்புக்களுக்கு செய்தல், அதில் பூர்வீகக்குடிகளுக்கும், கறுப்பின சமூகத்திற்கும், மற்றும் அதே அளவில் தேவையாகக் காணப்படும் குழுக்களுக்களும் கொடுத்தல்.

ஒவ்வொரு சந்ததிக்குமான பொருளாதார வளர்ச்சி

- கனடாவின் செயற்கை நுண்ணறிவுத்திறனை மேம்படுத்த $2 பில்லியன் நிதி உதவியுடன் கணனி கிடைப்பதற்கான நிதியம், கனடா இறையாண்மை கணனி உத்திக்காக,கனேடியன் ஆராய்ச்சியாளர்களுக்கும்,ஆரம்பத்தில் உள்ளவர்களுக்கும், வியாபர முறையில் போட்டியில் உள்ளவர்களுக்குமான் முதலீடாக அத்தொகை அமையும்.
- காப்புரிமை சார்பாக அதனை உடனடியாக முழுத்தொகையையும் அதன் முதலீட்டிலிருந்து தற்காலிகமாக இல்லாது செய்ய வியாபாரங்களுக்கு அனுமதி வழங்குதல். தரவு வலைவேலை உட்கட்டமைப்பு கருவி, கணனி, மற்றும் வேறு தரவு

படிமுறைக்குள்ளாகும் கருவி அவற்றின் உற்பத்டி அதிகரிப்புடன் நாளைய பொருளாதாரத்துடன் போட்டியிட வழி செய்தல்.

- மாணவர்களுக்கும்,பட்டமேற்படிப்பு ஆராய்ச்சியாளர்களுக்கும்,உள்ளூர் ஆராய்ச்சியாளர் உட்பட அவற்றின் சமூகத்தவர், அடிப்படையில் ஆராய்ச்சிக்கான மானிய நிதியை அதிகரித்தல்,புலமைப்பரிசில்,சேவையில் உள்ளபோதுள்ள ஆராய்ச்சிக்கான நிதியை அதிகரித்தல்.
- 3 வருடங்களிற்கு, $242.7 மில்லியன் முதலீட்டினூடாக நாட்டிற்குரிய முதற்குடிகளுக்குரிய பல்கலைக்கழகம், கல்லூரி, பட்டமேர்படிப்பு மணவர்களை அடுத்தசந்ததியினர் இவற்றைப் பயன்படுத்த வாய்ப்பளித்தல்.
- $5 பில்லியன் உள்நாட்டுக்குரிய கடன் உறுதித் திட்டத்தினூடாக இம்முதலீட்டில் உள்ளூர் சமூகங்களிற்கான நிகழ்ச்சித்டதிட்டங்களில்அதன் நலன்களை பங்கீடு செய்ய இயற்கை வளங்கள், சத்தி செயற்திட்டங்களை அவர்களது பிரந்தியங்களிலேயே அவைகளது நிபந்தனைகளுக்கேற்ப செய்தல்.
- $93 பில்லியன் நிதி வழங்கலின் மூலம்பெரிய பொருளாதார வரிக்கொடுப்பனவினை ஏற்படுத்தி தெளிவான வளர்ச்சி, கனடாவின் வருங்கால வியாபரங்களைப் பாதுகாப்பதுடன், நல்ல தொழில்களையும் வெளங்காலச் சந்ததிக்காக உருவாக்குதல்.
- ஒரு புதிய 10 வீதமான மின்சார வாகன விநியோகச் சங்கிலி முதலீட்டின் வரிக் கொடுப்பனவில் வியாபார நிலையங்களானவை முக்கிய துறைகளில் மின்சார வாகன விநியோகச் சங்கிலிகளில் கட்டடச் செலவிலேயெ முதலீடு செய்தல்.
- சுத்தமான எரிபொருளிற்கு ஆதரவான செயற்திட்டங்களிற்கு புதிய கருவிகளினூடாக சுத்தமான எரிபொருளைப் பெறும் நிதியத்தின் மூலம் விரைவாகவும், மேலதிகமாக நான்கு வருடங்களிற்கு நீடித்து 2029 -2030 காலப் பகுதிக்குள் அதனைச் செய்யலாம்.